## மாணவர்களின் நலன் கருதி தேசிய அளவில்

# ‘நீட்’ தேர்வை ரத்து செய்ய விரைந்து நடவடிக்கை எடுத்திடுவீர்!

## சட்டமன்ற தீர்மானத்தை இணைத்து பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஜூன் 30– மாணவர்களின் நலன் கருதி தேசிய அளவில் நீட் தேர்வை இரத்து செய்திட வலியுறுத்தி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

மருத்துவம் பயில விரும்பும் மாணவர்களின் நலன் கருதி தேசிய அளவில் நீட் தேர்வை இரத்து செய்திட வலியுறுத்தி நேற்று முன்தினம் (28-6-2024) சட்டமன்றப் பேரவையில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு இத்தீர்மானத்தை இணைத்து இது தொடர்பாககடிதம்ஒன்றைஎழுதியுள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:-



**‘நீட்’ மாணவர்களுக்கு தேவையற்ற மன அழுத்தம்!**

மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு, நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்கவேண்டும் என்ற தமிழ்நாட்டின் தொடர்ச்சியான கோரிக்கையை மீண்டும் வலியுறுத்துவதாகவும், தேசிய அளவில் இந்தத் தேர்வு முறையை இரத்து செய்திட வேண்டுமென வலியுறுத்துவதாகவும் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கை 12 ஆம் வகுப்பு மதிப்பெண்கள் அடிப்படையில் மட்டுமே இருக்க வேண்டும் என்றும், தனி நுழைவுத் தேர்வு அடிப்படையில் சேர்க்கை இருக்கக்கூடாது என்றும் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இந்தத் தேர்வு முறை மாணவர்களுக்குத் தேவையற்ற கூடுதல் மன அழுத்தத்தை ஏற்படுத்தும் என்பது தமிழ்நாட்டினுடைய கருத்தாகும் எனத் தெரிவித்துள்ளார். அந்த வகையில், நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்கவும், 12 ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் மருத்துவ மாணவர் சேர்க்கையை மேற்கொள்ளவும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இதுதொடர்பான சட்டமுன்வடிவு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக ஏற்கெனவே அனுப்பி வைக்கப்பட்ட போதிலும், இது நாள் வரையில் அக்கோப்பு நிலுவையில் உள்ளதாக தமது கடிதத்தில் வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

> *மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு, நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்கவேண்டும் என்ற தமிழ்நாட்டின் தொடர்ச்சியான கோரிக்கையை மீண்டும் வலியுறுத்துவதாகவும், தேசிய அளவில் இந்தத் தேர்வு முறையை இரத்து செய்திட வேண்டுமென வலியுறுத்துவதாகவும் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.*

**‘நீட்’ தேர்வில் நடந்த முறைகேடுகளால் எதிர்ப்பு!**

இதற்கிடையே, சமீபத்தில் நடந்த நீட் தேர்வின்போது நடைபெற்ற முறைகேடுகள், நீட் தேர்விற்கெதிரான தமிழ்நாட்டின் நிலைப்பாட்டினை உறுதிப்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், பல மாநிலங்களும் இந்தத் தேர்வு முறையை இரத்து செய்யவேண்டியதன் அவசியம் குறித்து தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கத் தொடங்கியுள்ளதாக தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 28-6-2024 அன்று, நீட் தேர்வு முறையை இரத்து செய்திட ஒன்றிய அரசை வலியுறுத்தி ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்களிப்பதற்கான சட்டமுன்வடிவிற்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளிக்கவேண்டுமென்றும், தேசிய அளவில் நீட் தேர்வு முறையைக் கைவிடும் வகையில் தேசிய மருத்துவ ஆணையச் சட்டத்தில் உரிய திருத்தங்களை ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும் இந்தியப் பிரதமர் அவர்களை வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நிறைவேற்றிய தீர்மானத்தின் நகலை தனது கடிதத்துடன் இணைத்து அனுப்பியுள்ளதாகத் தெரிவித்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இவ்விஷயத்தில் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் விரைந்து தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரியுள்ளார்.

---

## ‘நீட்’ தேர்வுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் தொடர் குரல் கொடுங்கள்!

# ‘இந்தியா’ கூட்டணியில் உள்ள மாநிலங்களும் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - நாடாளுமன்ற மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்திக்கு கடிதம்!

**சென்னை, ஜூன் 30– ‘நீட்’ தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு கோரும் கோரிக்கை குறித்து நாடாளுமன்றத்தில் குரல் எழுப்ப வேண்டும் என்று கோரியும், இந்தியா கூட்டணியில் உள்ள மாநிலங்கள் நீட் தேர்வுக்கு எதிராக தமிழ்நாட்டைப் போன்று அந்தந்த மாநில சட்டமன்றங்களில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுத்தும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எதிர்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்களுக்கு நேற்று முன்தினம் (28–6–2024) கடிதம் எழுதியுள்ளார்.**

நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு கோரும் கோரிக்கை குறித்து நாடாளுமன்றத்தில் குரல் எழுப்ப வேண்டும் என்று கோரியும், இந்தியா கூட்டணியில் உள்ள மாநிலங்கள் நீட் தேர்வுக்கு எதிராக தமிழ்நாட்டைப் போன்று அந்தந்த மாநில சட்டமன்றங்களில் தீர்மானம் நிறைவேற்றவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்களுக்கு நேற்று முன்தினம் (28-6-2024) கடிதம் எழுதியுள்ளார்.

**தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்!**

மருத்துவப் படிப்புகளில் மாணவர் சேர்க்கைக்கான நீட் தேர்வு முறையை தமிழ்நாடு தொடர்ந்து எதிர்த்து வருவதை தாங்கள் அறிவீர்கள் என்றும், தேசிய தேர்வு முகமை நடத்திய நீட் தேர்வில் ஏற்பட்ட பல்வேறு முறைகேடுகள் குறித்த சமீபத்திய செய்திகள் நாட்டில் மருத்துவப் படிப்புகளில் சேர்வதற்காக கடினமாக உழைக்கும் மாணவர்களின் கனவுகளை சிதைத்துள்ளதாகவும், கிராமப்புற ஏழை எளிய இளைஞர்கள் மருத்துவம் பயில வேண்டும்என்றகனவையும் இந்தத் தேர்வுமுறை தடுக்கிறது என்றும் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையும் குறிப்பிட்டுள்ளார்.

**தமிழ்நாட்டின் கோரிக்கையை பிற மாநிலங்களும் பின்பற்ற வேண்டும்!**

மேலும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நகலை எதிர்கட்சித் தலைவரின் பார்வைக்காக இத்துடன் இணைத்துள்ளதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டின் இந்தக் கோரிக்கை குறித்து நாடாளுமன்றத்தில் தாங்கள் குரல் எழுப்பவேண்டும் என்றும், இந்தியா கூட்டணியில் உள்ள மாநிலங்கள், மாணவர்களின் நலன் கருதி, தமிழ்நாட்டைப் போன்று அந்தந்த மாநில சட்டமன்றங்களில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

ஒன்றிய அரசால் பழிவாங்கப்பட்டவர்! ஜார்க்கண்ட் உயர்நீதிமன்றம் ஜாமீன் வழங்கியது!

# ஹேமந்த் சோரன் மன உறுதியைப் பாராட்டுகிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, ஜூன் 30- ஜார்க்கண்ட் முன்னாள் முதல்வர் ஹேமந்த் சோரன் அவர்களுக்கு ஜார்க்கண்ட் உயர்நீதிமன்றம் ஜாமீன் வழங்கியது இதனை வரவேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் ஒன்றிய அரசால் பழிவாங்கப்பட்டார், தற்போது ஹேமந்த் சோரன் அவர்களுக்கு ஜாமீன் வழங்கப்பட்டு இருக்கிறது அவரது மன உறுதியை பாராட்டுகிறேன் என்று குறிப்பிட்டார்.

நில மோசடி, சட்டவிரோத பணப் பரிமாற்ற என்று கூறி ஜார்க்கண்ட் மாநில முதல்வராக பதவி வகித்த ஹேமந்த் சோரனுக்கு முதலில் அமலாக்கத்துறை விசாரணைக்கு ஆஜராக சம்மன் அனுப்பியது. இவ்வழக்கில் ஹேமந்த் சோரனை விசாரணைக்கு ஆஜராக உத்தரவிட்டு 10 முறை அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியது. இதனடிப்படையில் விசாரணைக்கு ஆஜரானார் ஹேமந்த் சோரன்.

இந்நிலையில் ஹேமந்த் சோரன் கடந்த ஜனவரி மாதம் 31ந் தேதி அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டார். 6 மணிநேர விசாரணைக்குப் பின்னர் ஹேமந்த் சோரனை கைது செய்தது அமலாக்கத்துறை. இதனால் முதல்வர் பதவியை ஹேமந்த் சோரன் ராஜினாமா செய்தார். அவருக்குப் பதில் சாம்பாய் சோரன், ஜார்க்கண்ட் முதல்வராக பதவியேற்றார்.

ஜார்க்கண்ட் மாநிலம் பிர்ஸா முண்டா சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஹேமந்த் சோரன், இந்த வழக்கில் தமக்கு ஜாமீன் கோரி ஜார்க்கண்ட் உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார். இந்த மனு மீது நேற்று முன்தினம் விசாரணை நடைபெற்றது. ஹேமந்த் சோரன் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் அருணாப் சவுத்ரி, முதல் கட்ட தகவலின் படி நில மோசடி வழக்கில் ஹேமந்த் சோரன் குற்றவாளி இல்லை. ஜாமீனில் விடுதலையானாலும் குற்றம் செய்யவும் வாய்ப்பில்லை என்றார். இந்த வாதத்தை ஏற்று ஹேமந்த் சோரனுக்கு ஜார்க்கண்ட் உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் ஜாமீன் வழங்கியது.

*இச்செய்தியறிந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:*

**ஹேமந்த் சோரன் அவர்களே வருக!**

**சரியாக 2024 நாடாளுமன்றப் பொதுத்தேர்தலுக்கு முன்பாக ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சியின் தலைவர் ஹேமந்த் சோரன் அவர்கள் கைது செய்யப்பட்டது என்பது எதிர்ப்புக் குரலை நசுக்குவதற்காக பாஜக அரசு அரங்கேற்றிய அப்பட்டமான அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை ஆகும்.**

**பழங்குடியினத்தைச் சேர்ந்த முன்னணி அரசியல் தலைவர் ஒருவரின் முதலமைச்சர் பதவியைப் பறித்தனர், அவரை ஐந்து மாதங்கள் சிறையில் அடைத்து வதைத்தனர், தேர்தல் பரப்புரை மேற்கொள்ள விடாமல் தடுத்தனர்.**

**இந்நிலையில், அவருக்குப் பிணை வழங்கியுள்ள நீதிமன்றத் தீர்ப்பை வரவேற்கிறேன். திரு. ஹேமந்த் சோரன் அவர்களின் மன உறுதியையும், ஜார்க்கண்ட் மக்கள் மீது அவர் கொண்டுள்ள அர்பணிப்பையும் பாராட்டுகிறேன்.**

**இவ்வாறு முதல்வர் பதிவிட்டுள்ளார்.**

---

## சி.பி.ஐ. விசாரணை என்ற போது ஜெயலலிதா கூறியது என்ன?

# சி.பி.ஐ. விசாரணை என்று கூறி அரசியல் செய்யாதீர்!

## சட்டப்பேரவையில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு விளக்கமான பதில்!

*சென்னை, ஜூன் 30- சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் காவல் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் போது மனித நேய மக்கள் கட்சி ஜவாஹிருல்லா பேசும்போது கள்ளக்குறிச்சி விஷயத்தில் சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது. சி.பி.ஐ. விசாரிக்கும், மகளிர் ஆணையம் என்று நம்முடைய மாநிலங்களினுடைய உரிமைகளில் குறுக்கிடுகிறார்கள் என்று பேசியபோது பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு குறுக்கிட்டு பேசியதாவது:-*



*நம்முடைய உறுப்பினர் அவர்கள், எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் எல்லாம் CBI enquiry கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்கிற ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். CBI enquiry மட்டுமல்ல வெளியில் போய் பேட்டி கொடுக்கிறபோது கூட, ஜனநாயகக் கடமையை ஆற்றுவதற்கு எங்களுக்கு வாய்ப்பே இல்லை என்று தொலைபேசியிலும் பேசுகிறார்கள். நேற்று உண்ணாவிரதத்திலும் அதைத் தான் பேசியிருக்கிறார்கள். தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் ஒருமுறைக்கு இரண்டு முறை வெளியே நீங்கள் நடவடிக்கை எடுத்தாலும், உள்ளே நீங்கள் வந்து ஜனநாயகக் கடமை ஆற்றுங்கள் என்றுதான் தொடர்ந்து அவர்கள் வலியுறுத்தி உள்ளே வரச்சொன்னார்கள். ஜனநாயகக் கடமை ஆற்ற முடியாமல் தான் வெளியேபோய் உண்ணாவிரதம் என்ற பெயரில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்.*

*நான் இன்னொரு நிகழ்ச்சியையும் இங்கே நினைவூட்ட விரும்புகின்றேன். நான் எதிர்க்கட்சியாக இருக்கிற போது காவல் துறை மானியத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னை பேசுவதற்கு அனுமதித்திருக்கிறார்கள். 2015 செப்டம்பர் மாதம் 22 ஆம் தேதி இதே மாமன்றத்தில் நான் பேசினேன். என்ன பேசினேன் என்று சொன்னால், திருச்செங்கோட்டிலே விஷ்ணுப்பிரியா என்கிற ஒரு DSP அவர்கள் இறந்திருக்கிறார்கள். அது தற்கொலையா? அல்லது கொலையா? என்கிற ஒரு சந்தேகம் இருக்கிறது. எனவே, அன்றைக்கு ஓய்வு பெற்றிருக்கிற DGP ஆக இருந்த திலகவதி அவர்கள் ஒரு பேட்டி கொடுத்திருந்தார்கள். இது காவல் துறை சம்பந்தப்பட்டதாக இருக்கிறது. அதனால், இதை CBI enquiryக்கு விடலாம் என்று அந்த அம்மையார் சொல்லியிருந்தார்கள்.*

*அதை நான் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருக்கிறபோது, அந்தப் பத்திரிக்கை செய்தியை எடுத்து, ஓய்வு பெற்ற DGPயே சொல்கிறார். இது காவல் துறை சம்பந்தப்பட்டது; ஒரு பெண் சம்பந்தப்பட்டது. அதனால் CBI enquiry விட வேண்டுமென்று சொல்கிறார் என்ற கருத்தை சொன்னவுடனேயே, அன்றைக்கு முதலமைச்சராக இருந்த அம்மையார் அவர்கள் இந்த சட்டமன்றத்தில் எனக்கு என்ன பதில் சொல்லியிருக்கிறார் என்று சொன்னால், CBI விசாரணை மட்டும் நேர்மையான விசாரணை என்று கருதுவதற்கு சரியானது அல்ல. அகில இந்திய அளவிலே பரபரப்பாக உள்ள பல முக்கிய வழக்குகளில் CBI முன்னாள் இயக்குநர் மீதே குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருக்கிறது. உச்சநீதிமன்ற விசாரணையும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நான் நினைவூட்டுகிறேன் என்று என்னுடைய அந்தக் கேள்விக்கு அப்போதைய முதலமைச்சராக இருந்த ஜெ. ஜெயலலிதா அவர்கள் பதில் சொன்னார்கள்.*

*அதோடு மாத்திரமல்ல, 1995-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7 ஆம் தேதி CBI enquiry வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்த பரிதி இளம்வழுதி அவர்கள் அப்போது கேட்டார்கள். அன்றைக்கு அம்மையார் ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். அதற்கு அவர் பதில் என்ன சொன்னார் என்றால்; ஏதோ CBI என்றால் அவர்கள் ஏதோ நேர்மையாக தேவலோகத்திலிருந்து இறங்கி வந்தவர்கள் போலவும் அவர்கள் தவறே செய்யாதவர்கள் போலவும், இங்கே உறுப்பினர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டு காவல் துறையினர்மீது எங்களுக்கு நம்பிக்கையுண்டு என்று அவர்களே இந்த மன்றத்தில் பேசியிருக்கிறார்.*

*ஆனால், அவரை தெய்வம் என்றும், அவரை முதலமைச்சர் என்றும், அவரால் தான் நான் முகவரி செய்யப்பட்டேன் என்று பேசிக்கொண்டிருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் இப்போது CBI enquiry வேண்டுமென்று ஜனநாயகக் கடமையாற்றாமல் வெளியே போய்க்கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டு காவல் துறைமீது தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு நிரம்ப நம்பிக்கையிருக்கின்ற காரணத்தினால்தான், CBCID enquiry போட்டிருக்கிறார்கள். உண்மை வெளிப்படும். யாராக இருந்தாலும், தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுப்பார்கள். இதை வைத்துக்கொண்டு அரசியல் செய்யலாம் என்று நினைக்கிறார்கள். அது தமிழ்நாட்டு பொதுமக்கள் மத்தியில் எடுபடாது.*

*இவ்வாறு அவர் பேசினார்.*